செய்தி வெளியீடு எண்:620 நாள்: 27.12.2016

# செய்தி வெளியீடு

## 301 இடங்களில் ஆதார் உதவி மையங்கள்

## 28.12.2016 முதல் 28.02.2017 வரை செயல்படும்

தமிழ்நாட்டைச் சேர்ந்த பொது மக்களுக்கு ஆதார் எண் வழங்கும் பணியினை மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனமான பாரத மின்னணு நிறுவனம் (M/s. Bharat Electronics Limited) கடந்த 18.6.2011 அன்று துவங்கியது.

அரசாணை (நிலை) எண். 10, தகவல் தொழில் நுட்பவியல் துறை, நாள் 1.8.2016–ன் படி இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (Unique Identification Authority of India – UIDAI) ஆதார் பதிவுகளை மேற்கொள்ளும் பதிவாளராக (Registrar) தமிழக அரசின் தகவல் தொழில்நுட்பவியல் துறையின் கீழ் இயங்கும் மின் ஆளுமை இயக்குநரகம் / தமிழ்நாடு மின் ஆளுமை முகமை நியமனம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT) மற்றும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் (TACTV) ஆகியன சேர்க்கை முகமைகளாக (Enrollment Agencies) அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மேலும் 30.9.2016 வரை மட்டுமே பாரத மின்னணு நிறுவனம் தமிழகத்தில் ஆதார் பதிவுகளை மேற்கொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் கடந்த 23.9.2016 அன்று வெளியிட்ட அறிக்கையில், தேசிய மக்கள் தொகை பதிவு ஆவணத்திலிருந்து பெறப்படும் குடிமக்களின் உயிரியத் தகவலுடன் கூடிய தனிநபர் பற்றிய தகவல் தொகுப்போடு ஆதார் எண்களை ஒருங்கிணைத்து மாநில குடியிருப்போர் தகவல் தொகுப்பு மையம் (State Resident Data Hub) ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும் 650 நிரந்தர சேர்க்கை மையங்களை (Permanent Enrollment Centre) அமைக்க தாம் உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்கள். முதற்கட்டமாக, நிரந்தர சேர்க்கை மையங்கள் சென்னை மாநகராட்சி அலுவலகங்கள் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தாலும், அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், அனைத்து நகராட்சி அலுவலகங்கள் மற்றும் சென்னை நீங்கலான இதர மாநகராட்சி அலுவலகங்களில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தாலும் நிர்வகிக்கப்படும் என்றும் அறிவித்திருந்தார்கள்.

மேற்காணும் அறிவிப்பிற்கிணங்க **1.10.2016** முதல் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் சென்னை தலைமைச் செயலகத்தில் ஒரு மையம், **285** வட்டாட்சியர் அலுவலகங்களில் தலா ஒரு மையம், சென்னை மாநகராட்சி தலைமை அலுவலகத்தில் ஒரு மையம், சென்னை மாநகராட்சியின் **15** மண்டல அலுவலகங்களில் தலா ஒரு மையம், சென்னை மாநகராட்சியின் **36** கோட்ட அலுவலகங்களில் தலா ஒரு மையம், வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் ஒரு மையம் என மொத்தம் **339** நிரந்தர ஆதார் சேர்க்கை மையங்களை அமைத்து நிர்வகித்து வருகிறது. தமிழ்நாடு மின்னணு நிறுவனம் தமிழகத்தில் உள்ள **32** மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், **124** நகராட்சி அலுவலகங்கள் மற்றும் சென்னை நீங்கலான இதர மாநகராட்சிகள் என ஆக மொத்தம் **206** நிரந்தர ஆதார் சேர்க்கை மையங்களை அமைத்து நிர்வகித்து வருகிறது. ஆக மொத்தம் **545** நிரந்தர சேர்க்கை மையங்கள் தமிழ்நாடு முழுவதும் தற்போது முழுவீச்சில் இயங்கி வருகின்றன. மேற்கூறிய நிரந்தர ஆதார் சேர்க்கை மையங்கள் வாயிலாக **1.10.2016** முதல் நாளது தேதி வரை சுமார் **8.5** இலட்சம் ஆதார் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், **18.6.2011** முதல் **30.9.2016** வரை சுமார் **7.09** கோடி ஆதார் பதிவுகளை மத்திய அரசின் பொதுத் துறை நிறுவனமான பெல் (BEL) மேற்கொண்டுள்ளது. அப்பதிவுகளில் சுமார் **6.49** கோடி நபர்களுக்கு ஆதார் எண் வழங்கப்பட்டுள்ளது. **ஆதார் பதிவிற்கென கட்டணம் ஏதுமில்லை. இது ஒரு கட்டணமில்லா சேவையாகும்.**

ஆதார் சேர்க்கைக்குப் பதிவு செய்து ஆதார் எண் அல்லது ஆதார் அட்டை கிடைக்கப் பெறாதவர்கள் மீண்டும் மீண்டும் நிரந்தர ஆதார் சேர்க்கை மையங்களுக்கு சென்று பதிவு செய்வதால் இம்மையங்களுக்கு அதிக அளவில் பொது மக்கள் வருகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், ஏற்கனவே ஆதார் எண்ணிற்கென பதிவு செய்து இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தின் வாயிலாக ஆதார் எண் வழங்கப்பெற்றவர்கள், ஒரு முறைக்கு மேல் எத்தனை முறை மீண்டும் மீண்டும் பதிவு செய்தாலும் **புதிய ஆதார் எண் பெற இயலாது.** இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தின் மென்பொருள் அந்த பதிவுகளை நிராகரித்துவிடும். **எனவே, ஆதார் எண் பெறுவதற்கு ஒரு முறை பதிவு செய்தாலே போதுமானதாகும்.**

ஆதார் அட்டைக்கு பதிவு செய்து ஆதார் எண் அல்லது ஆதார் அட்டை கிடைக்கப்பெறாதவர்கள் மற்றும் ஆதார் அட்டையை தொலைத்தவர்கள் தங்களது ஆதார்

எண்ணை தெரிந்து கொள்ள ஏதுவாக தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, தற்போது **ஆதார் உதவி மையங்களை** தமிழகத்தின் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள் (285), சென்னை மாநகராட்சியின் மண்டல அலுவலகங்கள் (15) மற்றும் சென்னை மாநகராட்சி தலைமை அலுவலகம் என மொத்தம் 301 இடங்களில் அமைத்துள்ளது. **இம்மையங்கள் 28.12.2016 முதல் 28.2.2017 வரை செயல்படும்.**

இந்த ஆதார் உதவி மையங்களில், ஆதார் எண்ணிற்கு ஏற்கனவே பதிவுகளை செய்துவிட்டு ஆதார் எண் / ஆதார் அட்டை கிடைக்கப்பெறாத பொதுமக்கள் மற்றும் ஆதார் அட்டையை தொலைத்தவர்கள் **நேரில் சென்று** தங்களது பெயர், பிறந்த தேதி, அஞ்சல் குறியீடு எண், கை விரல் ரேகை மற்றும் கருவிழிகளைப் பதிவு செய்து, **சில விநாடிகளில் தங்களின் ஆதார் எண்ணை அறிந்து கொள்ளலாம்.**

மேற்கூறிய வழிமுறையில் கிடைத்த ஆதார் எண்ணை ஆதார் உதவி மையங்களின் அருகாமையிலேயே இயங்கும் அரசு இ–சேவை மையங்களில் காண்பித்து, விரல்ரேகை / கருவிழியினைப் பதிவு செய்து ரூ.30/– மட்டும் கட்டணம் செலுத்தி கைக்கு அடக்கமான பிளாஸ்டிக் ஆதார் அட்டையாகவோ அல்லது ரூ.10/– மட்டும் செலுத்தி காகிதத்தில் அச்சிட்டோ பெற்றுக் கொள்ளலாம்.

எனவே, ஆதார் எண்ணிற்கு ஒரு முறை பதிவு செய்தவர்கள் திரும்ப திரும்ப நிரந்தர ஆதார் பதிவு மையத்திற்கு செல்லத் தேவையில்லை என்றும் மேற்காணும் ஆதார் உதவி மையங்களை அணுகலாம் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**